# SYU

சோஷலிச இளைஞர் சங்கம்
සමාජවාදී තරුණ සංගමය
SOCIALIST YOUTH UNION

சோஷலிச இளைஞர் சங்கத்தின் வெளியீடு

அணி 01 படை 02 ISSN - 2279 - 137X

நன்கொடை ரூபா 30.00



## யுத்தம் முடிவடைந்து மூன்று வருடம்!
## வடபகுதியில் சிவில் நிர்வாகத்தை நிலைநாட்டு!

## யுத்தம் முடிவடைந்து மூன்று வருடம்!
## அனைத்து அரசியல் கைதிகளையும் உடனடியாக விடுதலை செய்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒன்றாய் பறப்போம் நம் வாழ்வினிலே!

அன்று 2012 ஏப்ரல் 16ம் திகதியாகும். உதய சூரியன் நேற்றைய தினத்தை விட மிகப்பரவசத்துடன் இளங்கதிர் எழுப்பி புதிய விடியலை அறிவித்தான். தெனியாய செல்வகந்த தோட்டத்து இளைஞர்கள் மிகச் சுறு சுறுப்புடன் துயிலெழும்பி காலை கடன்களை முடித்தனர். காரணம் இன்று தான் சோஷலிச இளைஞர் சங்கத்துடன் செல்வகந்த இளைஞர்கள் இணைந்து நடாத்தும் புத்தாண்டு திருவிழாவுக்கான விளையாட்டு விழா.

நேற்று, நாள் முழுவதும் பெய்த மழை காரணமாக இன்றைய நிகழ்ச்சி திட்டம் நடாத்த முடியாமல் போய்விடுமோ என்ற சந்தேக உணர்வு மனதை வாட்டிகொண்டே இருந்தது. ஆயினும் துணிச்சலின் பலம் என்று எண்ணி அனைவரும் ஒன்று கூடினோம்.

அன்று எங்கள் தோட்டம் முழுவதும் மாற்றம் தெரிந்தது. ஒவ்வொரு இளைஞனும், யுவதியும் புது உற்சாகத்துடன் இருப்பதை காணமுடிந்தது. எல்லோருடைய வாழ்விலும் இதுவரை இல்லாத ஒரு புதுப்பொழிவுடன் தென்பட்டனர்.



எல்லோரும் விழா நடாத்தவிருந்த மைதானத்தை நாடிச் சென்றனர். அனைவரும் ஒன்றிணைந்து மைதானத்தைச் சுத்தம் செய்து நிகழ்ச்சி ஆரம்பிக்க ஏற்பாடுகள் செய்தனர்.

வலுக்கம்பம் (கிறீஸ் மரம்) நாட்டுதல் முதன் முதலாக செய்யப்பட்டது. அதற்கு எல்லோருடைய ஒத்துழைப்பும் தேவைப் பட்டதை கண்டு ஒற்றுமையின் மகிமை எல்லோரையும் வியக்கவைத்தது. பின்னர் மரதன் ஓட்டப் போட்டி நடந்தது. மூன்று காலுடன் ஓடுதல் வலுக்கக் கம்பம் ஏறுதல், சாக்கில் இறங்கி ஓடுதல், பலூன் வெடித்தல், முட்டி உடைத்தல், கயிறிழுத்தல் போன்ற நிகழ்சிகள் மைதானத்தில் ஒவ்வொரு இடங்களிலும் நடந்தது. வலுக்கம்பத்தில் ஏறுவது அனைத்து இளைஞர்களுக்கும் சந்தோஷத்தை ஊட்டியது.

இவ்வளவு காலம் நாங்கள் போட்டியிட்ட போட்டிகள் அனைத்தும் ஒருவருக்கு வெற்றியும் மற்றவருக்கு தோல்வியும் மட்டுமே அழித்தது. இதுவரை காலமும் நாம் ஓர் போட்டியில் களந்துகொண்டால் கண்டிப்பாக வெற்றிபெற வேண்டும் என்ற எண்ணத்துடன் வாழ்ந்தோம். ஆனால் இம்முறை SYU வுடன் இணைந்து நடாத்திய விலையாட்டு போட்டிகளின் போது நாம் முற்றிலும் மாறுபட்டொம். பரிசில்கள் பெறுவதற்கு வெற்றிபெறுவதை விட ஒற்றுமையே சகோதரத்துவமே வெற்றி என உணர்த்துவதற்கு இம்முறை புத்தாண்டு விழா எமக்கு உதவியது. இதுவரை காலமும் யாரோ ஏற்பாடுசெய்த போட்டிகளில் நாங்கள் போட்டியாளர்களாக மட்டுமே கலந்துகொண்டோம். ஆனால் இம்முறை நாங்களே ஏற்பாட்டாளர்களாகவும் நாங்களே போட்டியாளர்களாகவும் காணப்பட்டோம்.



முன்பு நடந்த போட்டிகள் ஆளும் வர்க்கம் ஏற்பாடு செய்து தொழிலாள வர்க்கத்தை ஆட்டிவிடும் நிகழ்ச்சிகளாகவே இருந்திருக்கின்றது என நினைக்கும் போது மனதில் ஒரு சஞ்சலம் ஏற்படுகின்றது. ஆனால் இத்தடைவ இந்த போட்டிகளின் மூலமாக நாம் தன்னாதிக்கம் கொண்டவர்களாக மாற வேண்டும் என்ற புதுத் தெம்பு எம்மனதில் நிலைகொண்டது.

இதுவரை காலமும் அடக்கி, ஒடுக்கி புதைத்திருந்த எம் மக்களுடைய ஏற்பாட்டுச் சக்தி, துணிச்சல், பலம், நிதானம், ஒருமைப்பாட்டு உணர்வு போன்ற எல்லாமே வெளியுலகத்திற்கு காட்ட முடிந்தது இந்த புத்தாண்டு திருவிழாவின் காரணத்தினாலாகும்.

நாளாப்புரமும் சூழப்பட்ட தேயிலை தோட்டத்தின் மத்தியில் அமைந்ததொரு சிறிய கிராமத்தில் வாழ்கின்ற செல்வகந்தை என்னும் இக்கிராம மக்களாகிய நாம் தலைமுறை தலைமுறையாக தேயிலை தோட்ட ஊழியர்களாகவே வாழ்ந்து விட்டோம். ஒடுக்கப்பட்டு, நசுக்கப்பட்டு சுரண்டுதலுக்கு ஆளாகி வாழ்கின்ற எமக்கு சமத்துவம், நீதி, நியாயம், தன்னம்பிக்கையுடைய ஒரு புதிய சமுதாயத்தின் உறவு SYU மூலமாக எமது மனதில் உறுதியாகியது. அந்த கனவை நிறைவேற்றி ஒளிமயமான நாளைய தினத்தை எமது வருங்கால சந்ததியினருக்கு வழங்க "வாருங்கள் இளைஞர்களே ஒன்றாய் பறப்போம் நாம் "!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

SYU

அணி 1 படை 2

இல. 464/20,
பன்னிப்பிட்டிய வீதி,
பெலவத்த, பத்தரமுள்ள.

Tel: 0113 184961
077 0880580

www.syulanka.com

syulanka@gmail.com

Facebook: syu srilanka

# நாம் செய்ய வேண்டியது!

சர்வதேசத்தைப் போன்று எமது நாட்டிலும் தற்போது அரசியல், பொருளாதார, சமுதாய பிரச்சினைகள் பாரிய அளவில் நெருக்கடிகளுக்கு உள்ளாகி வருகின்றது. எமது நாட்டில் மாபெரும் அபிவிருத்தி பணிகள், போலி கண்துடைப்பு நிகழ்சிகள், வீண் விரயம், உற்பத்தித் துறையை கட்டியெழுப்புவதற்கு உரிய திட்டங்கள் இல்லாமை போன்ற பல காரணங்களினால் இந்நிலமை மிகவும் மோசமான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. வடக்கில் வசந்தம், கிழக்கில் உதயம், மகநெகும, கமநெகும, நாம் வளர்ப்போம் நாட்டை கட்டியெழுப்புவோம் என்பவை சாதாரண மக்களுக்கு போய்ச் சேராத "சிந்தனைத் திட்டங்களாகவே" காணப்படுகின்றது. வயிற்றுக்கு சாப்பிடாவிட்டாலும், உடுத்த துணி இல்லாவிட்டாலும், நிழலுக்கு கூரை இல்லாவிட்டாலும் பயணிப்பதற்கு காபட் வீதிகள் உள்ள அளவுக்கு அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இதேபோன்று யுத்தம் முடிவடைந்து மூன்று வருடங்கள் கடந்து விட்டாலும் இன்னமும் அப்பகுதி மக்களின் அடிப்படை பிரச்சினைகளை தீர்த்து தேசிய ஒற்றுமையை கட்டியெழுப்புவதற்கு பதிலாக தொடர்ந்தும் இனவாதத்தை தூண்டும் விதத்திலான செயல்களையே காணமுடிகின்றது. மறுபுறம் இம்மக்கள் முகம்கொடுக்கும் பிரச்சினைகள் அடிப்படையாக வைத்து முதலைக்கண்ணீர் வடித்து அமெரிக்கா, இந்தியா உட்பட ஏகாதிபத்திய நாடுகள் எமது நாட்டில் தலையிட்ட வண்ணம் உள்ளது.

எனவே, சிங்கள, தமிழ், முஸ்லிம் அனைவரும் தனித்தனியாக போராடுவதற்கு பதிலாக வரலாற்றில் காணப்பட்ட அனைத்து போராட்டங்களின் அனுபவங்களை ஒன்று திரட்டி அனைவரும் ஒன்றுசேர்ந்து, அனைவருக்காகவும் மிகவும் சக்தியுடனும் வலுவுடனும் போராடக்கூடிய வெகுஜன அமைப்பின் தேவையை பூர்த்தி செய்வதற்கு சோஷலிச இளைஞர் சங்கத்தின் நாம் தயாராகவுள்ளோம். அது உலகளாவியரீதியில் ஏகாதிபத்திய எதிர்ப்பு சக்திகளுடன் ஒன்றிணைந்ததாகவும் எமது நாட்டில் பின்தங்கிய முதலாளித்துவ ஆட்சியாளர்களுக்கு எதிராகவும் போராடுவதோடு சோஷலிச சமுதாயத்தை நிர்மாணிக்கும் சக்திவாய்ந்த அமைப்பாகவும் காணப்படும். எனவே நாட்டையும், நாட்டு மக்களையும் மனிதாபிமானத்தையும் நேசிக்கும் இளம் சமுதாயத்தினருக்கு இது புதியதோர் அத்தியாயத்தை ஆரம்பித்து வைக்கும்.


"இதுவரை காலமும் தத்துவஞானிகள் உலகை பல்வேறு விதத்தில் விபரிப்பபே செய்துள்ளனர். ஆனால் மிகப் பாரதூரமானது உலகை மாற்றியமைப்பதாகும்,"

---கார்ல் மாக்ஸ்----

ஆம் இளைஞர்களாகிய நாம் வளம்நிறைந்த எதிர்கால சமுதாயத்தின் உரிமையாளர்களாகும். நாம் அனைவரும் ஒன்றாய் மகிழ்ச்சியுடன் வாழும் சிறந்ததோர் சமுதாயத்தின் விடிவை எதிர்பார்கின்ற இளம் சமுதாயத்தினரை ஒன்றுதிரட்டுவது SYU வின் எதிர்பார்ப்பாகும்.

## ஆம் ஒன்றிணைவோம்...
## இது எமக்கே உரித்தான உலகம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கைத் தமிழர் பிரச்சினையும் இந்தியத் தலையீடும் !

இலங்கையின் தேசியப் பிரச்சினை தொடர்பாக ஆராய முற்படும் போது, இவ்விடயத்தில் இந்திய முதலாளித்துவ ஆட்சியாளர்களின் தலையீடுகள் தவிர்த்துவிட முடியாத அளவுக்கு அது ஊடுருவியுள்ளதை காணக்கூடியதாக உள்ளது. இந்தியத் தலையீட்டின் பிரதிபலிப்புகள் தொடர்பில் எமக்கு நிறைய அனுபவங்கள் உண்டு. எமது நாட்டின் பின்தங்கிய முதலாளித்துவ முறைமையினால் எதிர்கொண்ட நெருக்கடிகளுக்கு முகம்கொடுக்க முடியாமல் திண்டாடிய முதலாளித்துவ ஆட்சியாளர்கள் பெரும்பான்மையின மக்களின் கவனத்தை திசைதிருப்ப இனவாத அடிப்படையில் பலதரப்பட்ட அடக்குமுறைகளையும் வன்முறைகளையும் தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்துவிட்டதன் மூலம் இனமுரண்பாடுகளை முன்னெப்போதுமில்லாதவாறு கூர்மையடையச் செய்தனர்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்கெனவே தமிழ் முதலாளித்துவ தலைமைத்துவங்களின் பிரிவினைவாத கருத்தியல் மாயையினால் கவரப்பட்டிருந்த தமிழ் இளைஞர்கள், இலங்கை முதலாளித்துவ ஒடுக்குமுறை ஆட்சியாளர்களின் கையாலாகாத வங்குறோத்துத்தனமான அரசியல் சூழ்ச்சிகளுக்கும், அடக்குமுறைமைகளுக்கும் எதிராக பரந்துபட்டரீதியில் அரச அடக்குமுறைக்கு எதிரான அனைத்து முற்போக்கு சக்திகளையும் ஒன்றிணைத்து இலங்கையின் முதலாளித்துவ ஆட்சியாளர்களுக்கெதிராக போராடுவதற்குப் பதிலாக, வெறும் உணர்ச்சிகளுக்கு அடிமையாகி ஆயுதம் ஏந்தி போராடத் தயாரானார்கள். இவங்கை மீதான மேலாதிக்கத்துக்காக நாக்கை தொங்கப்போட்டுக்கொண்டு காத்திருந்த இந்தியா, சந்தர்ப்பத்தை சரியாகப் பயன்படுத்தி தமிழ் இளைஞர்களுக்கு ஆயுதங்களை வளங்கியதுடன் ஆயுதப்பயிற்சியையும் வளங்கியது. மறுபுறமாக ஆயுதம் ஏந்திய தமிழ் இளைஞர்களை பலக்குழுக்களாக பிளவுபடுதத்தியதுடன் பிளவுபட்ட தமிழ் ஆயுதக்குழுக்களிடையே மோதல்களையும் உருவாக்கிவிட்டது. கிட்டத்தட்ட 30 வருடங்களாக தொடர்ந்த ஆயுதப்போராட்டத்தினால் தமிழ் மக்களுக்கு பாரிய உயிர், உடமை அழிவுகளையும் பல்லாயிரக்கணக்கில் இளம் விதவைகளையும், அனாதரவான சிறுவர், சிறுமிகளையும் அங்கவீனர்களையும் உருவாக்கி விட்டதைத்தவிர உருப்படியான எந்தவொரு உரிமையையும் பெற்றுக் கொடுக்கவில்லை என்பதே உண்மை. தமிழ் இழைஞர்களின் பிரிவினைவாத போராட்டத்தை ஊக்குவித்த இந்தியா, யுத்தம் காரணமாக இடம் பெயர்ந்த திருகோணமலை தமிழ்மக்களின் வதிவிடங்களும், வாழ்வாதாரங்களும், வளமான வயல்நிலங்களும், வணக்கஸ்தலங்களும் நிறைந்த மூதூர் பிரதேசத்தில் பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலத்தை அபகரித்து இந்திய பெருமுதலாளிகளுக்கு கைத்தொழில் நிறுவனங்களை நிறுவுவதற்காக தாரைவார்த்துள்ளது. அதாவது எரிகிற வீட்டில் பிடுங்கியது லாபம் என்ற கதையாக இந்தியா தமிழ் மக்கள் வாழும் பகுதிகளில் தனது நிலஆக்கிரப்புகளை எதுவிதமான எதிர்ப்புகளுமின்றி முன்னெடுத்துச் செல்வதை கண்கூடாக காணமுடிகின்றது. இவ்வாறான நிலைமைகளின் மத்தியில்தான் மீண்டும் இந்தியா எமது நாட்டு பிரச்சினையில் தனது மூக்கை நுளைத்துக்கொண்டிருக்கிறது. இத்தனை அடாவடித்தனமான செய்கைகளை கண்டும் காணாதது போல் இருக்கும் தமிழ் தலைமைகள் என்போர் தேசியப்பிரச்சினையை தீர்க்கும் பொறுப்பை இந்தியாவிடம் ஒப்படைத்திருக்கும் காட்டிக்கொடுப்பை யாரிடம் போய் முறையிடுவது. மேற் கூறப்பட்ட விடயங்கள் அனைத்தும் இலங்கை மக்கள் அனைவரும் கடந்த 30 வருடகால அனுபவத்தில் கண்ட உண்மைகளாகும். உண்மையில் கடந்த 30 வருடகாலத்தில் தமிழ் மக்கள் இழந்ததைத் தவிர பெற்றது என்று சொல்லக்கூடியவை எதுவுமேயில்லை. அறிக்கை, மாநாடு என உசுப்பேத்தும் சந்தர்ப்பவாத அரசியலுக்குப்பதிலாக, உண்மையான உரிமைகளை வென்றெடுக்க சாத்தியமான அரசியல் பாதையை தெரிவுசெய்வதே இன்று வஞ்சிக்கப்பட்டிருக்கும் தமிழ் மக்கள் முன்னுள்ள சிறந்த தெரிவாகும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நாம் மனிதர்கள்

சிங்கள, தமிழ், முஸ்லிம் அன்பான தோழர்களே ஒரே நாட்டில் பிறந்த நாம் எமது உரிமைகளுக்காக வெவ்வேறாக போராடி மடிகையில் எதிரிகள் ஒன்று சேர்ந்து உப்பரிகையில் மது அருந்தியவாறு கைகொட்டி சிரித்துக் கொண்டிருப்பார்கள். என்பதை ஒடுக்கப்பட்ட மக்களாகிய நாம் அனைவரும் விளங்கிக்கொள்ள தம்புள்ளை முஸ்லிம் பள்ளிவாசலை அவ்விடத்திலிருந்து அகற்றுவது சம்பந்தமாக நாம் இந்த குறிப்பை எழுதும் நேரத்திலும் அவ்வண்ணமேயிருக்கின்றது. அப்பள்ளிவாசலை அவ்விடத்திலிருந்து அகற்றுமாறு போராடும் பிக்குமார் உள்ளிட்டவர்களின் அழுத்தத்தின் காரணமாக பிரதமர் மற்றும் மதவிவகார அமைச்சர் தி.மு. ஜயரத்ன அப்பள்ளிவாசலை அவ்விடத்திலிருந்து அகற்றுவதாக உறுதிமொழி வளங்கப்பட்டிருப்பதாக அறிகின்றோம். தம்புள்ள புண்ணிய பூமியில் வேறு எந்த பிற மத வழிபாட்டு தலங்களும் இருக்க முடியாது என்பதே ஆர்பாட்டக்கார பிக்குமார் உள்ளிட்டோரின் வாதமாகும். நகர அபிவிருத்தித் திட்டத்திற்கு புறம்பானதாலேயே இப்பள்ளிவாசலை அவ்விடத்திலிருந்து அகற்ற உறுதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழங்கியதாக பிரதமரின் கூற்றில் குறிப்பிடப்பட்டிருந்தது. நாம் இச்சிறு குறிப்பில் மதங்களை ஆராச்சிக்கு எடுத்துக்கொள்ளவில்லை, ஆனாலும் மதங்கள் சம்பந்தமான உரிமை மக்களுக்கு சொந்தமானது என முதலாளித்துவ யாப்புகளே ஏற்றுக்கொண்டுள்ளது. மதங்களை ஏற்றுக்கொள்வது அல்லது நிராகரிப்பது மனிதனின் மனச்சாட்சியுடன் ஒன்றிணைந்த ஓர் உரிமை. இதனை மதங்களை பின்பற்றுபவர்களும் பின்பற்றாதவர்களும் ஏற்றுக்கொள்ளும் ஓர் உண்மையாகும். பிக்குவே இது எனது விஷ்ணு கடவுளே என தனது மார்பில் தட்டிக்கொள்ளும் தம்புள்ளைதாயின் அழுகுரல் அவளின் மனச்சாட்சியுடன் ஒன்றிணைந்த மறுக்க முடியாத உரிமையே.


அடுத்து நாம் முக்கியமாக ஆராய வேண்டிய விடயம் இவ்வாறான நிகழ்வுகள் சேவை செய்வது யாருக்கு? என்பதேயாகும். இலங்கையிலும், உலகிலும் மத வழிபாட்டுத் தலங்களை அண்டிய பகுதியில் விபச்சார விடுதிகள், மதுபானச் சாலைகள், சூதாட்டகலம் நட்சத்திர ஹோட்டல்களில் இரவு களியாட்ட விடுதிகளையும் காணக்கூடியதாக உள்ளது.

தம்புள்ளைய எடுத்துக் கொண்டால் புண்ணிய பூமியிலேயே அமைக்கப்பட்டிருக்கும் பொருளாதாரச் சந்தையில் வலுக்கட்டாயமாக நிதி வசூலித்தல், விவசாயிகளின் சாறை உறிஞ்சக் கூடிய போலியான வியாபார நிறுவனங்களும் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. மிக அனேகமான மதத்தலைவர்கள் (சரியான சிந்தனையுடைய சில மதத் தலைவர்களை தவிர) முதலாளித்துவத்தின் இவ்வாறான சுரண்டல்களுக்கு எதிராக குரலெழுப்பும் சந்தர்பங்களை நாம் பார்த்ததில்லை. தம்புள்ள பிரதேசத்தில் தனது அறுவடைகளை விற்றுக்கொள்ள முடியாமல் போராடி இறுதியில் தற்கொலை செய்து கொள்ளும் விவசாயிகளின் போராட்டத்தை ஆசீர்வதிக்கும் எவ்விதமான பூஜைகலோ மத வழிபாட்டுத் தலங்கலோ நாம் பார்ததில்லை, இவ்வாறாக முதலாளித்துவத்தின் சுரண்டல்களை மதத்துாதுவர்களும் எதிர்திருக்கின்றார்கள். அவ்வாறாயின் இன்றைய மதத் தலைவர்களும் எதிர்திருக்கின்றார்கள். நிலைமை இவ்வாறிருக்க இன்றைய மதத் தலைவர்கள் முதலாளித்துவ சீர்கேடுகளுக்கு எதிராக கிளர்ந்தெழும்புவதற்கு பதிலாக பிற மத வழிபாட்டுத் தலகங்களுக்கு எதிராக கிளர்ந்தெழுவதே, இவ்வாறான போராட்டங்கள் முஸ்லிம், இந்து மத்தவர்கள் பெருன்பான்மையான பிரதேசங்களில் பௌத்த விகாரைகளுக்கு எதிராக உருவாகாதா?

ராஜபக்ஷ அரசு இந்நடவடிக்கைகளை ஆசீர்வதிப்பது ஏன்? இவ்வாறான நடவடிக்கைகள் அரசுக்கு சேவை செய்வதினாலாகும். சமூகத்தின் உண்மையான பிரச்சினைகளிலிருந்து மக்களின் கவனத்தை திசைதிருப்புவதற்கு இவ்வாறான பிரச்சினைகள் கையாள்வது முதலாளித்துவ அரசுகளின் தந்திரோபாயமாகும்

இவ்வாறான செய்திகள் பொது மக்களின் உண்மையான பிரச்சினைகளை மறப்பதற்கு மென்று மென்று கொண்டிருப்பதற்காக அரசினால் வழங்கப்படும் "அரசியல் சுவிங்கம்களேயாகும்"

தம்புள்ள நிகழ்வு படுமோசமாக, சர்வதேசத்திற்கு ஆதரவான ராஜபக்ஷ அரசுக்கு எதிரான சிங்கள, தமிழ், முஸ்லிம் என்ற வேறுபாடுகளின்றி இலங்கை மக்கள் ஒன்றிணைந்து கொண்டிருக்கின்ற சமயத்தில் துவேசமான செயலாகவே நாம் கருதுகிறோம். இத்தீயினை நாம் அனைக்க வேண்டும். இதனை இன்னொரு அயோத்தியாக்க அரசுக்கும், இனவாதிகளுக்கும், மதஅடிப்படைவாதிகளுக்கும் இடம் கொடுக்கக் கூடாது. இச்சமுதாயத்தின் தேசிய ஒற்றுமையை நல்லிணக்கத்தை எதிர்பார்க்கும் இளைஞர், யுவதிகளாகிய நாம் ஒன்றிணைந்து, கைகோர்த்து திடசங்கட்பம் பூண்டு இவ்வாறான நிலமைகளை தடுக்க முன்வர வேண்டும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# டாக்கடர் கோவூரின் சவால்கள்

ஏப்ராம் ரீ கோவூர் என்பவர் மூட நம்பிக்கைகளுக்கு எதிராக போராடியதோடு அப்பாவி மக்களை மீட்டெடுப்பதற்காகவும் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொண்ட ஓர் பொருள்முதல்வாதியாகும்.
அவர் 1963ல் கண்புலனுக்கு தென்படாத சக்திகள் உள்ளதெனவும் அல்லது இந்திரஜாலங்கள், மாயாஜாலங்கள், ஆவிகள் அல்லது இவ்வாறான ஏதாவதொரு சக்தி உள்ளதென கூறுபவர்களுக்கு அவர்களது சக்தியை மக்கள் முன் காட்டி அதை ஊர்ஜிதம் செய்வதற்கு ஓர் அறிய சந்தர்ப்பத்தை வழங்கினார்.
இது உலகை அதிர்சிக்குள்ளாக்கிய சவால்கள் என உலகலாவிய மட்டத்தில் பிரபல்யமானது. இவர் முன்னின்று அமைத்த உலக ஹேத்துவாதி (காரணக்கர்த்தாக்களின்) சங்கத்தினால் இச் சவால்களை ஏற்று அதை வெற்றிகரமாக செய்துகாட்டுபவருக்கு ஒரு லட்சம் ரூபாய் ரொக்கப்பணம் பரிசாக பெற்றுக்கொடுப்பதற்கு தயாராகவிருந்தாலும் இச் சவால்களை ஏற்பதற்கு யாருமே முன்வரவில்லை. டாக்டர் கோவூர் அவர்களினால் உலகளவில் பகிரங்கப்படுத்தப்பட்ட 22 சவால்கள் பின்வருமாறு.



கொழும்பு 06 பாமன்கடை ஒழுங்கையில் வசிக்கும் ஏப்ரஹம் ரீ கோவூர் ஆகிய நான், உங்களின் கருத்துப்படி தம்வசமுள்ள இந்திரஜால, மாயாஜால அல்லது வேறு ஏதாவதொரு சக்தி இருக்குமாயின் உலகலாவிய மட்டத்திலுள்ள எவருக்கும் அதை பகிரங்கமாகக் காட்டி ஊர்ஜிதம் செய்தால் ஒரு லட்சம் ரூபா ரொக்கப்பணம் பரிசாக வழங்கத் தயாராவுள்ளதை தெரிவித்துக்கொள்கிறேன். இவ்வாறான திறமையுடையவர் இந்த ரொக்கப்பணத்தை பரிசாக பெற்றுக்கொள்ளும் வரை, அல்லது எனது இறப்பு வரை இது செல்லுபடியாகும்.
கடவுளின் புதல்வர்கள், பரிசுத்த ஜீவிகள், சாமியார், தவம் செய்பவர்கள் அல்லது இவ்வகையான எவருக்கும் தம்வசமுள்ள கடவுள் சக்தியாலோ அல்லது உளரீதியான ஏதாவதொரு சக்தியினால் கீழே காணப்படும் சவால்களில் ஒன்றை செய்து காட்டுபவருக்கு இந்த ரொக்கப்பணம் பரிசாக பெற்றுக்கொள்ள முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1) ஒட்டப்பட்ட காகித உறைக்குல் உள்ள காசு நோட்டின் இலக்கத்தை கூறுதல்
2) காசு நோட்டொன்றை படைத்தல்.
3) தீ மிதிக்கும் நெருப்பு கரியின் மீது 30 செக்கன்கள் சுடாமல் நின்று கொள்ளல்.
4) நான் கேட்கும் பொருளொன்றை படைத்து காட்டுதல்.
5) பொருளொன்றை சிந்தனா சக்தியினால் அசைத்தல் அல்லது வலைத்தல்.
6) தனது சிந்தனா சக்தியினால் இன்னொருவர் சிந்திப்பதை கூறுதல்.
7) சத்திர சிகிச்சை மூலம் வெட்டிய ஒரு நபரின் கையை வேதம் ஓதுதலால், சிந்தனா சக்தியால் அல்லது கடவுளின் ஆசீர்வாதத்துடன் ஒரு அங்குலம் நீட்டுதல்.
8) யோக சக்தியால் வானத்தில் மிதந்து வருதல்
9) யோக சக்தியால் இதயத் துடிப்பை 5 நிமிடங்களுக்கு நிறுத்தி வைத்தல்.
10) தண்ணீர் மீது நடந்து செல்லல்.
11) ஒரே நேரத்தில் இரண்டு இடங்களில் காட்சி அளித்தல்
12) யோக சக்தியால் 5 நிமிடங்களுக்கு மூச்செடுப்பதை நிறுத்துதல்.
13) தியகத்தின் மூலம் புத்தியை கூட்டுதல் அல்லது மானசீக சக்தியை பெற்றுகொள்தல்.
14) ஒருவரின் உடம்பிலுள்ள ஆவி, பிசாசுகளின் சக்தியால் அல்லது மறுபிறப்பினால் தனக்கு தெரியாத மொழியில் கதைத்தல்.
15) ஆவியை அல்லது பிசாசை புகைப்படமெடுக்க வைத்தல்.
16) புகைப்படத்திலிருந்து காணாமற் போகுதல்.
17) பூட்டப்பட்ட அறையொன்றிலிருந்து ஏதாவது சக்தியினால் வெளியே வருதல்.
18) ஒரு பொருளின் பாரத்தை அதிகரித்தல்.
19) ஒழித்துவைக்கப்பட்ட ஒரு பொருளை தேடிக்கொடுத்தல்.
20) தண்ணீரை பெற்றோல் அல்லது வயினாக மாற்றுதல்.
21) வயினை இரத்தமாக மாற்றுதல்.
22) பத்து நபர்களின் பிறந்த இடத்தை நேரத்தை அல்லது கைரேகையை வழங்கியபின் அவர்களது ஆண், பெண் வேறுபாட்டையும் அவர்கள் இறந்து விட்டார்களா? அல்லது உயிருடன் இருக்கின்றார்களா? என்று கூறுதல்.

## -கட்டுப்பாடுகள்-

1) தனது இந்திரஜால, மாயாஜால அல்லது வேறு ஏதாவதோர் சக்தியை உறுதிபடுத்துவதற்கு கலந்துகொள்வோர் 1000 ரூபாய் முற்பணம் செலுத்த வேண்டும். பிரச்சாரத்தை பெற்று கொள்வதை நிறுத்துவதற்கே இம் முற்பணம் அறவிடுகிறோம்.

2) யாராவது இச் சவால்களை ஏற்றுக் கொண்டுள்ளார் என்பதை உறுதிசெய்து கொள்வது இந்த முற்பணம் செலுத்திய பின் மட்டுமே ஆகும். முற்பணம் செலுத்தாத நபர்களுடன் ஆவணப் பரிமாரல்கள் செய்து கொள்ள மாட்டாது.

3) முற்பணம் செலுத்திய பின்பு இரு சாராரின் இணக்கப்பாடுடன் ஓர் நாளில் எனது பிரதிநிதி ஓர் மக்கள் கூட்டத்தின் போது உரிய நபரின் சக்தியை பரீட்சித்து பார்க்கப்படும்.

4) போட்டியாளர் அதில் கலந்துகொள்ளாவிட்டால் அல்லது தனது திறமையை உறுதிசெய்ய முடியாவிட்டால் முற்பணம் இரத்தாகும்.

5) முதற்சுற்று பரீட்சையின் போது தனது திறமையை உறுதிசெய்து விட்டால் மக்கள் கூட்டத்தின் போது என்னால் இறுதி பரீட்சை நடாத்தப்படும்.

6) இதில் அவர் தனது திறமையை சரிவர காட்டினால் முற்பணமும் ஒரு லட்சம் ரூபாய் ரொக்கப்பணமும் அவருக்கு வழங்கப்படும்.

இச் சவால்கள் 22ம் 1963ம் ஆண்டு வெளியிடப்பட்டதோடு உலகளவில் இதை பிரச்சாரம்செய்யப்பட்டது. தன்வசம் இந்திரஜால, மாயாஜால அல்லது வேறு வகையான சக்திகள் உள்ளதென கூறுபவர்களுக்கு இதை தனிப்பட் ரீதியில் நாம் அறிவுருத்தினோம். 1975ல் பெங்களுரைச் சேர்ந்த ஓர் வைத்தியர் தனக்கு கடவுள் சக்தியிருப்பதை உறுதி செய்ய முடியுமென முற்பணம் செலுத்தினாலும் பரிசீலனைக்காக அவர் சமுகமளிக்காத படியால் இவரது முற்பணம் இரத்தாகியது. 1976ல் சுவீடன் நாட்டவர் தனக்கு தண்ணீர் மீது நடக்க முடியும் என முற்பணம் செலுத்தப்பட்டாலும் அவரும் பரீட்சைக்கு பங்குகொள்ளாத படியால் அவரது முற்பணமும் இரத்தாகியது. எனவே இச் சவால்கள் இன்னமும் தோற்கடிக்க முடியாத சவால்களாகவே காணப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஜனநாயகப் பாதையின் முடிவு

யுத்தம் முடிவடைந்து கடந்த மே 19ம் திகதிக்கு 3 வருடங்கள் பூர்த்தியாகியது. பிரித்தானியா ஏகாதிபத்தியவாதிகள் போஷித்த இனவாதமும், இலங்கையை ஆட்சி செய்த பல்வேறு ஆட்சியாளர்களினால் தமது தேர்தல் வெற்றிகளுக்காக சிங்கள, தமிழ், முஸ்லிம் இனவாதங்களை எழுப்பியதாலும், இந்தியா மற்றும் ஏகாதிபத்தியவாகளின் தலையீட்டினால் இலங்கையின் தேசியப் பிரச்சினை ஓர் யுத்தமாக வடிவெடுத்தது. அவ்வாறே பொருளாதார நெருக்கடியும் குறிப்பாக அரசாங்கங்களினால் தமிழ் மக்களுக்கு எதிராக கொண்டு சென்ற பொருளாதார, அரசியல், சமுதாய அளுத்தங்களின் தாக்கங்களின் காரணமாகவும் இப்பிரச்சினை யுத்தமாக மாறியதால் நாட்டில் அனைத்து மக்களும் குறிப்பாக வடக்கு கிழக்கு மக்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கும் இழப்புகளுக்கும் முகம் கொடுத்தனர். முதலாளித்துவ அரசாங்கங்களினதும் சர்வாதிகார புலிகளின் அடாவடித்தன்மைகள் காரணமாக ஏற்பட்ட இந் நிலமைகள் யுத்தம் முடிவடைந்தவுடன் மாற வேண்டியிருந்தாலும் 30 வருடகாலப்பகுதியில் மறுக்கப்பட்ட ஜனநாயக உரிமைகளான கருத்துச் சுதந்திரம், ஒன்றுகூடும் சுதந்திரம், பொருளாதாரச் சுதந்திரம், போக்குவரத்துச் சுதந்திரம், தாம் விரும்பிய மதத்தை தளுவக்கூடிய உரிமை, தமது பிறந்த ஊரில் அல்லது தாம் விரும்பும் இடத்தில் வசிக்கும் உரிமை, சட்டத்தின் சமத்துவம், தாண்தோண்றித் தனமாக கைது செய்யாமலும், அடக்குறைகள் இல்லாது வசிக்கும் உரிமை, அரச இராணுவத்தின் அல்லது புலிகளின் விதானைகளுக்கு பதிலாக பொதுச் சட்டத்தின் சம்பிரதாயங்கள் ஊடாக நிர்வகிக்கப்படும் சுதந்திரம் உள்ளிட்ட ஜனநாயக உரிமைகள் யுத்தச் சூழலில் மறுக்கப்பட்டதுடன் யுத்தம் முடிவடைந்ததன் பின் இவ் உரிமைகள் அனைத்தும் மீண்டும் கிடைக்க வேண்டியது கட்டாயமாகும்.

**யுத்தம் முடிவடைந்து 3 வருடங்கள் முடிவடைந்த தருவாயில் நிலமைகள் எவ்வாறு?**

3 வருடங்களுக்குப் பின்பும் குறிப்பாக வடக்கு கிழக்கு மக்களுக்கு கருத்துச் சுதந்திரம், ஒன்று கூடும் சுதந்திரம், போக்குவரத்து சுதந்திரம், தாம் பிறந்து வளர்ந்த ஊரில் அல்லது தாம் விரும்பிய இடத்தில் வசிக்கும் உரிமை போன்றவை மறுக்கப்பட்டு வருகிறது. இவை அனைத்து உரிமைகளும் இராணுவச் சட்டத்தால் அடக்கியொடுக்கப்பட்டுள்ளது. சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட ஆயிரக்கணக்கான இளைஞர், யுவதிகள் 3 வருடங்களுக்குப் பின்பும் எந்தவிதமான விசாரணையும் இன்றி தடுத்துவைத்துள்ளனர். பயங்கரவாத தடுப்புச் சட்டம் இன்னமும் இயங்குகின்றது. சிவில் நிர்வாகத்திற்கு பதிலாக வடக்கு கிழக்கு பகுதியில் இடை இராணுவ ஆட்சியே இன்னமும் காணப்படுகின்றது. அண்மையில் திருகோணமலையில் நடந்ததைப் போன்று நீதிமன்ற உத்தரவாதம் இன்றி பெரும்பாளானவர்களை கைது செய்த சம்பவம், கடத்துவது மற்றும் காணாமல் போவது, ஊடகவியலாளர்களை தாக்குவது தொடர்ந்தும் காணப்படுகின்றது. எனவே யுத்தம் முடிவடைந்ததன் பின்பு மக்கள் எதிர்பார்த்தது குண்டுகள் வெடிக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தாம் பிறந்து வளர்ந்த ஊரில் அல்லது தாம் விரும்பிய இடத்தில் வசிக்கும் உரிமை போன்றவை இன்னும் மறுக்கப்பட்டு வருகிறது. இவை அனைத்து உரிமைகளும் இராணுவச் சட்டதத்தால் அடக்கியொடுக்கப்பட்டுள்ளது. சந்தேகத்தின் பேரில் கைது செய்யபட்ட ஆயிரக்கணக்கான இளைஞர், யுவதிகள் 3 வருடங்களுக்குப் பின்பும் எந்தவிதமான விசாரணையும் இன்றி தடுத்துவைத்துள்ளனர்.

அல்லது துப்பாக்கி ரவைகள் வெடிப்பது நின்றுவிடுவது மட்டுமல்ல பறிக்கப்பட்ட உறிமைகளின் ஓர் பகுதியையாவது கிடைக்குமென்றே நம்பினார்கள். ஆனால் யுத்தம் முடிவடைந்து 3 வருடங்களுக்கு பின்பும் மிஞ்சியுள்ள ஜனநாயக உரிமைகளை படிப்படையாக இல்லாதொழிக்கும் நிகழ்வுகளையே மக்கள் அனுபவித்து வருகின்றனர்.

**இரண்டாவது சம்பவம்**
**பொலிஸ் அதிரடிப்படையும் புதையல் தோண்டுதலும்!**

அண்மையில் அநுராதபுரம் விலச்சி பகுதியில் பொலிஸ் அதிரடித்துறையைச் சார்ந்த ஒருகுழு புதையல் தோண்டுவதற்கு எடுத்த முயற்சியை அப்பகுதி மக்களினால் தோற்கடிக்கப்பட்டது. STF சீருடையணிந்து நவீன ஆயுதங்களை சுமந்து பெக்கோ இயந்திரங்களுடன் வந்து பழமைவாய்ந்த அழிவுகுட்பட்ட விகாரயை தோண்டிக் கொண்டிருக்கும் போது விலச்சி பகுதி மக்கள் ஒன்றிணைந்து வந்து STF படையினரை விரட்டியடிக்கபட்பட்டது. இச் சம்பவத்தின் பாரதுாரமான விடயம், இதன் பின்பே நடந்தது. அது என்னவென்றால் இது தொடர்பாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பொலிஸ் மாஅதிபரும் வெளியிட்ட அறிக்கையானது STF படையினர் தமது கடைமையை ஆற்றியுள்ளதாகவே, களவாடப்பட்ட புதையல் இவ் இடத்தில் புதைக்கப்பட்டுள்ளதாக பெயர் குறிப்பிடாத ஒரு குழுவினால் பொலிஸ் தலமையகத்திற்கு புகார் செய்திருந்தனர் இவற்றை தேடுவதற்காகவே STF படையினர் அங்கு சென்றனர் என்றாகும். குற்றவாளிகளை சட்டத்திற்கு முன் கொண்டுவர வேண்டிய பொலிசாரே குற்றவாளிகளை துாய்மைப்படுத்தி, பொலிஸ் மாஅதிபரே இவ்வாறு கூறுவது எந்தளவுக்கு நியாயமானது. எமது நாட்டில் கடந்த காலங்களில் பாரிய அளவில் புதையல்கள் தோண்டுவதும், தொழ்பொருள்கள் கொள்ளையிடுவதும் அதிகரித்ததோடு இச் சம்பவங்களுடன் அரச பாதுகாப்பு துறையினருக்கும் ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவுக்கும் எதிராக பல்வேறு குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டது. ஆனால் இது குறித்து எவ்வித விசாரணையும் நடாத்தப்படவில்லை. எனவே இக் குற்றங்களை உரிய வகையில் ஊர்ஜிதம் செய்ய முடியாமல் போனது. இவற்றுக்கிடையில் அதிபாதுகாப்பு வலயத்திலமைந்த தேசிய நுாதன சாலையை கொள்ளையிட்டதும் இதனோடு அரச பாதுகாப்பு தரப்பினர் தொடர்பு இருப்பதாகவும் பகிரங்கமானதோர் சம்பவமாகும். இவ்வாறிருக்க இவற்றை செய்வது பாதுகாப்பு தரப்பினரே என கையும் மெய்யுமாக மாட்டியவுடன் பொலிஸ்மா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிபரே இவர்களை நியாயப்படுத்துவதில் இருந்து அரசின் உயர்மட்டத்தவர்களும் இவற்றுடன் தொடர்பு உள்ளதை யோசிக்கத் தூண்டுகிறது. ராஜபக்ஷ ஆட்சியின் கீழ் புதையல் தோண்டுவதும், போதைபொருள் வியாபாரம், வெள்ளை வேன் கடத்தல்கள் போன்றவை பாதுகாப்பு தரப்பால் மேற்கொள்வதும் பின்பு விடுவிப்பதும் போன்ற நிலமைகள் நாட்டில் உருவாகியுள்ளது. நாட்டில் ஜனநாயகத்தை குழிதோண்டி புதைக்கும் பயணம் என்பதை உறுதிபடுத்தும் நிகழ்வான

**முன்றாவது சம்பவம்**

ஜனாதிபதி ஆலோசகர் பாரத லக்ஷ்மண் பிரேமசந்திரவும் பா.உ துமிந்த சில்வா உட்பட பாதுகாவலர்களுக்கிடையே நடந்த துப்பாக்கி சூட்டினால் பாரத லக்ஷ்மண் பிரேமசந்திரவும் இன்னும் 4 பாதுகாவலர்களும் கொலைசெய்யப்பட்ட சம்பவம் ஆகும் இது இலங்கையில் பொலிஸ் துறையிலும் நிதிமன்றத் துறையிலும் சாவுமணி ஒலிப்பதன் ஓர் பிரதான சம்பவமாகும். இருவரும் அரச தரப்பு முக்கிய அரசியல்வாதிகளான படியாலும் இருவருமே ஜனாதிபதி ராஜபக்ஷவின் நெருங்கிய அரசியல் ஆதரவாளர்களான படியாலும் இருவருக்கிடையே ஏற்பட்ட துப்பாக்கிச் சூட்டினால் ஒருவர் மரணித்ததால் அரசாங்கத்தின் பொலிசார், நீதிமன்றம் போன்றவை செயல்படும் விதம் அரசின் வெட்கங்கெட்ட தன்மையையே காட்டுகிறது.

எக்காரணம் கொண்டும் பாரளுமன்ற உறுப்பினர்களுக்கோ அல்லது ஜனாதிபதி ஆலோசகர்களுக்கோ வழங்கப்படாத, வழங்க முடியாத ஆயுதங்களை இவ்விரு சாராரிடமும் இருந்தது. இது குறித்து எந்தவித கதையும் பொலிஸ் நிலயங்களிலோ அல்லது நீதிமன்றங்களிலோ யாரும் கதைக்க கூட வில்லை. சாதாரண சிறைக் கைதிகளுக்கு தேவையான மருந்து மற்றும் சிறையிலிருந்த போது சரத் பொன்சேக்காவுக்கு சுடுநீர் பெற்றுக் கொள்வதற்கு உயர் நீதிமன்றத்தில் உத்தரவு பெற்றுக்கொண்ட எமது நாட்டில் துமிந்த சில்வா சிங்கப்பூரிலுள்ள வைத்தியசாலைக்கு ஜனாதிபதி முன்னின்று அனுப்புவதும், சுமார் 6 மாதங்கள் வரை அவர் இருக்கும் இடம்கூட தெரியாது என பொலிசார் கூறுவதும், இறுதியில் நீதிமன்றத்தை நிராகரிக்கும் துமின்த சில்வாவுக்கு எதிராக நீதிமன்றத்தினால் பிடியானை வழங்க முடியாது எனக் கூறுவதிலிருந்தும் ஊர்ஜிதமாகுவது இலங்கையின் பொலிஸ் துறையும் நீதிமன்றத் துறையும் இறுதி மூச்சை விடுவதல்லவா?

நாம் இம் மூன்று சம்பவங்களினாலும் காட்ட முயற்சியெடுத்தது எமது நாட்டில் ஜனநாயக நிறுவனங்கள் இம் மோசடி ஏமாற்றுமிக்க ஆட்சியின் கீழ் இறுதி மூச்சை விட்டுக்கொண்டுள்ளது என்பதை உணர்த்துவதற்காகும். சட்டத்துக்கு அடிபணியாது, அடியாட்களின் செயல்பாடுகள் மேலோங்கியுள்ள நிலையே எமது நாட்டில் காணப்படுகின்றது என்பது உறுதி. எனவே மக்களுக்கு, சிவில் அமைப்புகளுக்கு, புத்திஜீவிகளுக்கு உள்ள பொறுப்பு இம் மோசடியான, ஏமாற்றுமிக்க ஆட்சியின் தன்மையைபகிரங்கப்படுத்துவதும் ஜனநாயகத்தை உறுதிபடுத்துவதற்கும் உரிய பொறுப்பை ஆற்றுவதாகும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறியாவும் நேட்டோ தலையீடும்

ஓட்டோமான் பேரரசரின் ஆட்சியில் ஓர் பகுதியாகவிருந்த சிறியா பிரான்சு காலனித்துவமாகவிருந்து 1946 ஏப்ரல் 17ம் திகதி சுதந்திரம் பெற்று மீண்டும் எகிப்துடன் ஒன்றிணைந்து ஒரு நாடாக "ஐக்கிய அரபு குடியரசை" கட்டியெழுப்பப்பட்டது. 1961 ஆண்டு அதிலிருந்து பிரிந்து மீண்டும் சிறியாவாக தனித்து இயங்கியது. சூழ்ச்சியினால் ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றிய ஹபீஸ் அல்அசாத் 1970லிருந்து 2000 ஆண்டு வரை 30 வருடங்களாக சர்வாதிகார ஆட்சியை நடாத்தி சென்றதோடு அவசரகால சட்டம் அரசியல் அடக்கு முறையை கட்டவிழ்த்து வந்தார்.

1970- 2011 இடைக்காலத்தில் சிறிய அரசியல் வரலாற்றில் முக்கிய குறிப்புகள்

- 1970 அனைத்து அரசியல் கட்சிகளையும் தடைசெய்தமை
- உரிய தேர்தலுக்கு பதிலாக மக்கள் கணிப்பு வாக்கெடுப்புகள் மூலம் ஆட்சியை நீடித்துக் கொள்ளுதல்.
- சர்வாதிகார குடும்ப ஆட்சி முறை நடாத்தி சென்றமை.
- 2004ம் ஆண்டு வரை முதலாளித்துவ பொருளாதார முறையை முதன்மையாகக் கொண்டு சென்ற அரசாங்கம் பிறகு லிபரல்வாத பொருளாதார கொள்கைக்கு மாறியது.
- மக்களின் வாழ்க்கை சுமை பாரிய அளவில் அதிகரித்தது.
- நிவாரணங்கள் மற்றும் சலுகைகள் துண்டிக்கப்பட்டது.
- எவ்வாறான திட்டமிடலும் இல்லாது உறுவாக்கப்பட்ட திறந்த பொருளாதார முறையினால் விவசாயத் துறை, உள்நாட்டு உற்பத்தித் துறை பாரிய அளவில் சரிந்தது.
- இளைஞர் தொழில் இன்மை உயர்ந்தது.
- அரச உற்பத்தித் துறை தனியார்மயமாக்கப்பட்டது.

நீண்டகால அரசியல் அடக்கு முறைக்கு புரம்பாக பொருளாதார நெருக்கடியும் பாரிய அளவில் காணப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இச்சூழலை சிறியா ஆட்சிக்கு எதிரான போராட்டங்களுக்கு உந்து சக்தியாக விளங்கியது.
போராட்டங்களின் முன்னணி சக்திகள்

- தொழில் இல்லாத மற்றும் தொழில் புரியும் இளம் சமுதாயம்
- தொழில் சங்கங்கள்
- குர்தி அரசியல் கட்சிகள் மற்றும் அமைப்புகள்
- அனைத்து வர்கங்களினதும் வெகுஜன அமைப்புகள்

சனத்தொகை: 22,517,750 (2010 ஜுலை)
பரப்பளவு: 185,180 ச.கி மீ.
பொருளாதாரம்:
உ.உ. அமெ. டொ.107.4ப பிள்ளியன் (2010)
தனிநபர் வருமானம்: 4800 அ.டொ. (2010)
தொழிலின்மை: 8.3% (2010)
வறுமை மக்கள்: 33%
வருமானம்: 12.48 பிள்ளியன் அ.டொ
செலவு: 14.97 பிள்ளியன் அ.டொ.
அரச கடன்: 27.8%

அரபு வசந்தமாக சுட்டிகாட்டி அடியெடுத்து வைத்த அமைதி ஆர்பாட்டங்கள் இன்று சிறியா அரசாங்கத்தின் ஆட்சிக்கு எதிரான ஆயுத போராட்டமாக முன்னோக்கி வந்துள்ளது. லிபியாவில் கடாபிக்கு எதிரான மக்கள் போராட்டத்தை பயன்படுத்திய ஏகாதிபத்தியவாதிகள் லிபியாவில் போன்று சிறியாவிலும் தலையிட ஆரம்பித்துள்ளனர் தற்போது சிறிய தேசிய கவுன்சில் (Syrian Natilonal Council) என்றபெயரில் ஒன்று கூடிய சிறிய எதிர்கட்சியும் துர்க்கி உட்பட சிறிய எதிர்கட்சிக்கு ஆதரவு வழங்கும் நாடுகளின் வற்புறுத்தலினால் ஆயுத குழுக்களுக்கு சம்பளம் வழங்க ஆரம்பித்துள்ளனர். அவ்வாறே அவர்களுக்கு ஆயுதம் சாராத உபகரணங்களை விநியோகிப்பதை அதிகரித்துவருவதோடு அமெரிக்காவால் இவர்களுக்கு தொடர்புசாதன பொருட்களையும் வழங்கி வருகின்றது.
இவ்வாறான தலையீட்டுகளுக்கு மத்தியில் இங்கு இனவாத, மதவாத தாக்குதல்கள் உக்கிரமடைந்து வருகிறது.
மத்திய கிழக்கில் மதச்சார்பற்ற ஒரேயொரு நாடு சிறியாவாகும். இதன் ஆட்சியை சரிப்பதற்கான ஏகாதிபத்தியவாதிகளின் கூலியாட்களின் தேவையை, ஏகாதிபத்தியவாதிகளின் யுத்த அமைப்பான "நேட்டோ" நன்று பயன்படுத்தி வருகின்றது. மத விழிப்புணர்வு என்ற பெயரில் சிறியாவில் இனவாத யுத்தத்தை ஆரம்பித்துவைப்பது ஏகாதிபத்தியவாதிகளின் குறிக்கோளாகும். லிபியாவில் பயன்படுத்தப்பட்ட அப்துல் ஹக்கீமின் "லிபிய இஸ்லாமிய போராளிகள் குழு" (LIFG) சிறியாவினுள் பயங்கரவாத செயல்களை இயக்குவதற்கு செயல்பட்டு வருவது இந்த நோக்கத்தினாலாகும்.
நீண்ட நாட்களாக காணப்படும் ஒடுக்குமுறைக்கு, அடக்குமுறைக்கு எதிராக மேலெழும் மக்கள் போராட்டங்கள் எமக்கு நிராகரிக்க முடியாது, ஆனால் இப்போராட்டங்கள் எத்திசையை நோக்கி நகர்கின்றது, யாருடைய தேவையை பூர்த்தி செய்கின்றது என்பதை சாலவும் கருத்தில் கொள்ள வேண்டும். ஏனென்றால் ஏகாதிபத்தியவாதிகளுடன் ஒன்றிணைந்து ஜனநாயகத்தை நிலைநாட்டவோ உரிமைகளை வென்றெடுக்கவோ முடியாது என்பதை லிபியாவில், எகிப்தில் படிப்பினைகள் எமக்கு மேலும் மேலும் உணர்த்துகின்றது.
எவ்வாறாயினும் சிறிய எதிர்ப்பு நடவடிக்கைகள் முதலாளித்துவ சர்வாதிகார குடும்ப ஆட்சிகளுக்கு தமது ஆட்சிகளை தொடர்ந்தும் நடாத்தி செல்ல முடியாது என்பதையும் இவாவாறான ஆட்சிகள் மக்களை பலியெடுக்கும் ஏகாதிபத்தியத்தியத்துக்கு, வல்லரசுக்களுக்கு திட்டங்களை தீட்ட வலிசமைக்கின்றது என்ற அரசியல் படிப்பினைகளாக விளங்கிக்கொள்ளலாம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெருக்கடியிலுள்ள மீன்பிடித் துறை



இலங்கை நாளா புறமும் கடலால் சூழப்பட்ட ஒரு நாடு. இதுமட்டுமன்றி ஏறக்குறைய பத்தாயிரம் சிறிய , பெரிய குளங்கள், நூற்றுக்கும் மேற்பட்ட பிரதான நதிகள் நாட்டின் நாலாப்புறங்களிலும் ஓடிக்கொண்டிருக்கின்றன. இவை நாம் ஏற்கனவே தெரிந்து வைத்திருக்கின்ற விடயங்களாகும். இலங்கையின் மீன் பிடித்துறையை எடுத்துக்கொண்டால் பிரதானமாக கடலை மையமாகக் கொண்டே மேற்கொள்ளப்படுவதோடு நண்ணீர் மீன்பிடியும் குளங்களை அண்டிய பகுதிகளில் உள்ள மக்கள் ஈடுபட்டு வருகின்றனர். இலங்கை மக்களின் உணவுப் பழக்கத்தில் அதிகமான இடத்தைப் பிடித்திருப்பது மீனும் அதனுடன் கூடிய உற்பத்திகளே என்று ஒருபக்கம் கூறுவதோடு 40% விகிதத்திற்க்கும் அதிகமானோர் ஊட்டச்சத்து குறைபாடு உடையவர்கள் என்றும் அதிலும் குறிப்பாக 60% விகிதத்திற்கு அதிகமான குழந்தைகள் மந்த போஷாக்கு நிலையில் காணப்படுவதாகவும், இலங்கை மக்களின் பெரும்பாலானவர்கள் புரதச்சத்து குறைபாட்டு உடையவர்கள் என்று ஆய்வுகள் குறிப்பிடுகின்றன. அத்துடன் மத்தியவங்கி அறிக்கையின் படி இலங்கையில் மீன் மற்றும் மீன் உற்பத்திகளை இறக்குமதி செய்ய வருடந்தோரும் பல மில்லியன் கணக்கான அமெரிக்க டொலர்களை செலவிடுகின்றது.

மாலைதீவு, சிலீ, ரஷ்யா, நோர்வே போன்ற நாடுகள் தமக்குரிய வளங்களை பயன்படுத்தி மீனுற்பத்தியில் தன்னிறைவு பெற்றுள்ளது மட்டுமன்றி அதிகளவான அண்ணியச் செலாவணியையும் ஈட்டித்தரும் ஓர் துறையாகக் கொண்டிருக்கையில் நமது நாடு நாலாபுறமும் கடலால் சூழ்ந்தும் நாட்டின் உட்பாகத்தில் அனேகமான நீர் நிலைகளை கொண்டிருந்தும் எமக்கு அவ்வாறான நிலைக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது ஏன்? இதை சற்று ஆராய்வது அவசியமாகும்.

கடந்த முப்பது வருடங்களுக்கு மேலாக எமது நாட்டில் நிலவிய யுத்தச் சூழல் மீன் பிடித்துறையை வெகுவாக பாதித்தது என்பதனை நாம் ஏற்றுக்கொள்கின்றோம்.

அக்காலப்பகுதியில் இத்துறையின் வீழ்ச்சிக்கு இதனையே பிரதான காரணமாக அரசாங்கங்கள் குறிப்பிட்டதோடு, வட பகுதி கடற் பரப்பில் காணப்படும் மீன்கள் வயது முதிர்ந்து அவைகளுக்கு கொம்புகளும் முளைத்திருப்பதாக கூட சில அமைச்சர்கள் குறிப்பிட்டதோடு யுத்தம் முடிவடைந்த பின்னர் நாட்டிலுள்ள அனைத்து மக்களுக்கும் மிகக் குறைவான விலையில் மீன்கள் வாங்கிச் சாப்பிட முடியும் என்று குறிப்பிட்டது உங்களுக்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞாபகமிருக்கும் என நினைக்கிறோம். இன்று யுத்தம் நிறைவின் மூன்றாண்டுகளையும் தாண்டிவிட்டோம். மீன் பிடித்துறையில் பாரிய எழுச்சியை நாம் பெற்றுள்ளோமா? அல்லது அக்காலகட்டத்துடன் ஒப்பிடுகையில் குறைவான விலைகளில் மீன்கள் வாங்க முடிகிறதா? இல்லை என்றே நீங்கள் சொல்வீர்கள், அவ்வாறெனின் இத்துறையை பாதிக்கும் ஒரே காரணி யுத்தமே என எம்மால் குறிப்பிட முடியாது. அவ்வாறெனில் இத்துறையை பாதிக்க பல்வேறு காரிணிகள் உள்ளன என்பதே அர்த்தம்.

கடந்த சில மாதங்களுக்கு முன் அரசாங்கம் மிகப்பாரிய அளவில் எரிபொருள் விலைகளை உயர்த்தியது. இது மீனவர்களை வெகுவாக பாதிப்புக்கு உள்ளாக்கியதோடு, மீனவர்களின் பெரும் எதிர்புக்கும் உள்ளாகியது. பல ஆயிரக்கணக்கான மீனவர்கள் இதற்கெதிராக வீதியில் இறங்கி ஆர்பாட்டங்களை மேற்கொண்டதோடு அரசு வழமைபோல் துப்பாக்கி முனையில் அவ்வார்பாட்டங்களை அடக்கியது. நீர்கொழும்பு பகுதியில் நடந்த ஆர்பாட்டமொன்றின்போது அந்தோனி பெர்னான்டோவை அரசபடைகளின் துப்பாக்கிச் சூட்டால் மரணித்தது உங்கள் அனைவருக்கும் தெரிந்த விடயமாகும். இவ்வாறான நிலைமைகளின் பிரதிபலனாக அரசாங்கம் மீனவர்களுக்கு எரிபொருள்மானியங்களை வழங்கினாலும் அவைகளை வழங்குவதிலும் பெற்றுக்கொள்வதிலும் பல சிக்கல்கள் தோன்றியுள்ளதாகவும் மீனவர்கள் குறிப்பிடுகின்றார்கள். உதாரணமாக அம்பாந்தோட்டை மாவட்ட மீனவர்களுக்கு மானிய முத்திரைகள் அனைத்தும் வழங்கப்பட்டிருக்கும் தருவாயில் மட்டக்களப்பு மாவட்ட மீனவர்களுக்கு இரண்டு மாத முத்திரைகள் இன்னும் வழங்கப்படவில்லை என்பதனையும் குறிப்பிடலாம். எது எவ்வாறாயினும் எரிபொருள் விலையேற்றம் மீனவர்களை பாதித்திருப்பது நாம் அனைவரும் அறிந்த விடயமாகும். அவ்வாறே பல பகுதி மீனவர்களுக்கு இறங்கு துறை இல்லமையையும் ஓர் பிரச்சினையாக காணப்படுகின்றது. உதாரணமாக மட்டக்களப்பு மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் இப்பிரச்சினைக்கு மீனவர்கள் முகம்கொடுக்கின்றனர். இம் மாவட்டத்தில் முப்பதாயிரத்திக்கும் மேற்பட்டவர்கள் மீன்பிடித்துறையில் ஈடுபட்டள்ள அதேவேளை அவர்களுக்கு வாழைச்சேனை இயற்கை இறங்கு துறையை தவிர்ந்த எந்த இறங்கு துறையும் அரசினால் அமைத்துத் தரவில்லை. இதன் காரணமாக சென்ற வருடம் கடற்காற்றினால் ஒன்பது பாரிய வள்ளங்கள் சேதத்துக்கு உள்ளானதாகவம் அப்பகுதி மீனவர்கள் தெரிவிக்கின்றனர் அவ்வாறே பல இறங்கு துறைகளை பல வருடங்களாக புனரமைப்பு செய்யப்படாமையினாலும் பல பகுதி மீனவர்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு உள்ளாகியுள்ளார்கள் என்பதயைும் எம்மால் காணமுடிந்தது.

அவ்வாறே மீன் பிடித்துறையில் ஈடுபடுபவதற்கு அவதானமாக இருக்க வேண்டிய காலநிலை தகவல்களை வானிலை ஆராய்ச்சி நிலையத்தின் துணையுடன் வழங்குவதில் மீன்பிடித் துறையை சார்ந்த அதிகாரிகள் தவறியுள்ளனர், மீன்பிடித்துறையை தனது ஜீவனோபாயமாக மேற்கொள்ளும் மீனவர்கள் பற்றிய எதிர்பு கூறல்களை பெற்றிருந்தாலும் இன்று உலகில் காணப்படும் நவீன கருவிகளின் துணையுடன் பெறப்படும் அவசர தகவல்களை மீனவர்களுக்கு வழங்குவதற்கு இவர்கள் தவறியுள்ளார்கள் இதன் காரணமாக நாட்டில் பல்வேறு பாகங்களிலிருந்து கடலுக்குச் சென்ற மீனவர்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில் தமது உயிரினை பலிகொடுத்த சந்தர்ப்பங்கள் கேள்விபட்டிருக்கிறோம். அவ்வாறே தரையிலிருந்து கடலுக்கும் கடலிருந்து தரைக்கும் செய்திகளை பறிமாறிக்கொள்ளும் வானொலி தகவல் நிலயங்களும் தமது பொறுப்பினை சரியாக மேற்கொள்வதில்லை.

வடக்கு கிழக்கு மீனவர்களை பொறுத்தவரையில் நாம் மேற்குறிப்பிட்ட பிரச்சினைகளுக்கு மேலதிகமாக இலங்கை கடற்பரப்பில் அயல்நாட்டு மீனவர்கள் அத்துமீறி நுழைவதனையும் முக்கியமாக இங்கு குறிப்பிட்டாக வேண்டும். குறிப்பாக இந்திய மீனவர்கள் எமது கடற்பரப்பையும் அதனைதாண்டி தடை செய்யப்பட்டுள்ள உபகரணங்களை கூட பயன்படுத்தி மீன் பிடியில் ஈடுபடுவதாகவும், அவ்வாறு ஈடுபடுபவர்கள் பலர் இலங்கை கடற்படையினரால் கைது செய்யபட்டாலும் வழமை போல் இந்தியாவுக்கு அடிபணிந்து பிணையில் விடுதலை செய்யப்படுவதாகவும் குறிப்பிடுகின்றனர். இதற்கு புரம்மாக இலங்கை மீனவர்கள் பலர் மாதக்கணக்காகவும் சிலர் வருடக்கணக்காகவும் இந்தியா,





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாலைதீவு, அந்தமான் தீவுகளில் சிறைகளில் அடைபட்டுத் தவிப்பதாகவும் அவர்களை விடுதலை செய்வதில் அரசு சரியான இராஜதந்திரமுறைகளை கையாள்வதில்லை என்பதும் புலனாகின்றது. அவ்வாறே சில மாதங்களுக்கு முன்னர் நீர்கொழும்பு பகுதிலிருந்து கடலுக்குச் சென்ற "நிமேஷா துவ" என்கின்ற பல நாள் ஆழ்கடல் மீனவ கப்பலில் சென்றவர்கள் சர்வதேச கடற்பரப்பில் மீன் பிடியில் ஈடுபட்டிருக்கும் சந்தர்ப்பத்தில் சோமாலிய கடற்கொள்ளையினர்களால் கப்பல் பணயமாக கைப்பற்றப்பட்ட சந்தர்பத்திலும் இலங்கை அரசு அவர்கள் விடயத்தில் அசமந்தப் போக்கையே கையாண்டதாக தெரிகின்றது. கடைசியில் எதேச்சையாக ஸ்பானிய கடற்படையினரால் இவர்கள் விடுவிக்கப்படுகின்றார்கள். இது எவ்வாறாயினும் இவ்வாறான சந்தர்பங்களிலும் கூட இவர்களின் துணையின்றி வாடும் இவர்களது குடும்பங்களுக்கு சேம நலன்களையாவது வழங்காதது வேதனைக்குரியதே.

கடல் மீன்பிடித்துறைக்கு அடுத்தபடியாக இலங்கையில் மேம்படுத்தக் கூடிய துறையாக நண்ணீர் மீன் பிடித் துறையை குறிப்பிடலாம். இதற்கு பிரதான காரணம் விவசாயத் துறையை மையமாகக் கொண்டு இலங்கையில் நிர்மாணிக்கப்பட்டுள்ள பல்லாயிரக்கணக்கான குளங்களும், நீர் மின்சாரத்தை மையமாக கொண்டு அமைக்கப்பட்டுள்ள பாரிய நீர்தேக்கங்களும் எமது நாட்டில் உண்டு. குளங்கள் சரியான முறையில் புனர்நிர்மாணம் செய்யப்படாமையும், இவைகளில் வளர்க்கக் கூடிய சரியான மீனினங்கள் இணங்காணப்படாமையும் இத்துறையினை வெகுவாக பாதித்திருக்கின்றது.


மேற்குறிப்பிட்ட பல்வேறுபட்ட பிரச்சினைகளுக்கு மத்தியிலும் அறுவடை செய்யப்படுகின்ற மீனை விற்பனை செய்வதிலும் மீனவர்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம்கொடுத்து வருகின்றனர். மறுபுறம் மீன்களை களஞ்சியப்படுத்தக்கூடிய களஞ்சியச் சாலைகள் மிகக் குறைந்த அளவில் காணப்படுவதிலும், மீன்களை கொள்வனவு செய்வதில் அரச பங்களிப்பு மிகக் குறைந்த அளவில் காணப்படுவதாலும் மீனவர்கள் பெரும்பிரச்சினைகளுக்கு முகம்கொடுத்து வருகின்றனர். இவ்வாறான பிரச்சினைகளுக்கு மத்தியிலும் மேற்கொள்ளப்படுகின்ற மீனவத்தொழிலை மேம்படுத்த அரசாங்கம் ஆக்கபூர்வமான செயற்திட்டங்களை மேற்கொள்வதாக எமக்கு தென்படவில்லை.

இலங்கையில் விவசாயத்துக்கு அடுத்தபடியாக மேம்படுத்த முடியுமான மீன்பிடித் துறையை அபிவிருத்தி செய்வதன் மூலம் நாட்டின் மீன், உற்பத்தியில் தன்னிறைவு காண்பது மட்டுமன்றி, இலங்கை மக்களின் போஷாக்கு குறைபாடு நிவர்தி செய்யப்படுவதுடன் இறக்குமதி செலவினையும் கட்டுப்படுத்த முடியும். அரசு மீன் பிடித்துறையை மேம்படுத்தல் என்ற போர்வையில் காலி துறைமுகத்தை அண்டியதாக மீன்களை டின்களில் அடைக்கும் ஒரு தொழிற்சாலையை நிறுவியது என்றாலும் அதற்கான மீன்கள் சிலி நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படுகின்றது என்பதே உண்மை. ஒரு நாடு பொருளாதார ரீதியாக முன்னேறுவதாயின் அந்நாட்டு மக்களின் தேவைகளுக்காக பெற்றுகொள்ள முடியுமான அனைத்து விடயங்களையும் உள்நாட்டிலேயே பெற்றுகொள்ள முடியுமான வரை ஏற்றுமதியை ஊக்குவிக்கப்பட வேண்டும். அவ்வாறான ஒரு துறையாகவே நாம் மீன்பிடித்துறையை இணங்கண்டுள்ளோம். இதற்கு மாறாக இன்றைய அரசுகள் மரங்களை நடாமலேயே காய்களை பறிக்கும் பாணியிலான ஒரு கொள்கையினையே கொண்டுள்ளது. முதலாளித்துவ பொருளாதாரக் கொள்கையினை தலைமேற் சுமந்துள்ள அரசுக்களின் பொதுவான இயல்பு இதுவாகும். எனவே இது தொடர்பாக குரல் எழுப்பவேண்டியது இன்றைய இளம் பரம்பரையின் பொறுப்பு என நாம் கருதுகிறோம். ஆம் இளைஞர்களே அதற்கு தலைமை தாங்க சோஷலிச இளைஞர் சங்கத்தினராகிய நாம் தயார்! நீங்கள் தயாரா?



|| வடக்கு கிழக்கு மீனவர்களை பொறுத்தவரையில் நாம் மேற்குறிப்பிட்ட பிரச்சினைகளுக்கு மேலதிகமாக இலங்கை கடற்பரப்பபை அத்துமீறி நுழைவதனையும் முக்கியமாக இங்கு குறிப்பிட்டாக வேண்டும் ||

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கனவுகள்

எமது நாட்டில் கிரிகெட் போட்டிகள் இடம்பெறும் போது கடைகளிலே, தொலைகாட்சி விற்பனை நிலயங்களிலே, பெரும்பாலான வீடுகளிலே இப்போட்டிகளை பார்வையிடுவதை, செவிமடுப்பதை நாம் அவதானித்திருக்கிறோம். அந்தளவுக்கு எமது நாட்டில் கிரிகெட் விலையாட்டுக்கு கிராக்கு இருக்கின்றது. இதுமட்டுமன்றி ஓட்டவீரங்கானி சுசன்திகா சர்தேச மட்ட போட்டிகளில் ஓடும்போது நாம் அனைவரும் எந்தவித வேறுபாடுமின்றி இலங்கையர் என்ற உணர்வுடன் பார்வையிடுவதும் தெரிந்த விடயமாகும். முஸ்லிம், தமிழ், சிங்கள, பர்கர், மலே என்ற வேறுபாட்டை நீக்கி நாம் அனைவரையும் ஒன்றாய் இணைக்கும் வள்ளமை விலையாட்டு துறைக்கு உள்ளது என்று கூறுவது மிகையாகாது.

ஆனால் பிரச்சினை என்னவென்றால் இத்தகைய வள்ளமையுள்ள விலையாட்டுத் துறை இன்று ஒருசிலரின் அல்லது ஒரு குடும்பத்தின் சொத்தாகியுள்ளதே மிகக் கவலை தரும் விடயமாக உள்ளது. உதாரணமாக பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ அவரின் சகோரரர் யோசித ராஜபக்ஷ ஆகியோர் பாடசாலை பருவத்திலிருந்து ரக்பி விளையாட்டில் ஈடுபட்டு வருவது உண்மையென்றாலும். இன்று இவ்விலையாட்டுத் துறை அவர்களுடைய தனிச்சொத்தாக மாறியுள்ளது. இதற்கு முன்பு ஒருபோதும் இலங்கை தேசிய அணியை பிரதிநித்துவம் செய்யாத யோஷித ராஜபக்ஷ இன்று தேசிய குழுவில் தலைவராகியுள்ளார். இதுவரை காலமும் ரக்பி விலையாட்டுத் துறையில் கரீடத்தை பெற்றிருந்த கண்டி விலையாட்டு கழகத்தின் நான்கு பேர் தேசிய அணியை பிரதிநிதித்துவம் செய்யும் போது அதில் மிகத் திறமையாக விலையாடும் பாஹித் மர்ஜ், பிரதீப் லியனகே, கயான் விஜேரத்தின, ரொகான் வீரரத்தின போன்றோருக்கு தேசிய அணியில் கதவுகள் மூடப்பட்டுள்ளது.

இதுமட்டுமன்றி ஊசுரூகுஊ போன்ற குழுக்களில் நிலமையும் இதற்கு மாறானதல்ல. எனவே நாட்டின் தலவரினதும் அவரது பிள்ளைகளினதும் அதிகாரக் கனவுகளுக்காக நாட்டின் அனைத்து துறையையும் சீரளிக்கும் விதத்தில் விலையாட்டுத் துறையையும் இன்று சீரளித்து வருவது கவலைக்குறிய விடயமாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# வேற்றுமையை வளர்ப்போமா?



இந்து சமுத்திரத்தில் இதயமாக போற்றப்படும் இலங்கை நாட்டின் வரலாற்றை எடுத்தியம்பும் இலக்கியங்கள் பல எழுதப்பட்டுள்ளன. இவைகளில் சில உண்மைகள் ஒழிக்கப்பட்டிருக்கலாம் என்று இன்றைய நவீன இலக்கியங்கள் கூறுகின்றன.

இவை எந்தளவுக்கு உண்மை என எம்மால் கூறமுடியாது. காரணம் வரலாறு என்பது காலத்தின் கண்ணாடி என்பர். ஆகவே குறித்த காலத்தில யார் ஆட்சிசெய்கின்றாரோ! அவரை சார்ந்தே வரலாறு படைக்கப்படுகிறது. உதாரணமாக இன்றைய மகிந்த சிந்தனை போல் ஆசியாவின் ஐஸ்வர்யத்துக்குரிய சிந்தனைகளை எழுதிவைத்துகொண்டு நடைமுறையில் ஊழல், மோசடி, வீண்விரயம், ஆட்கடத்தல், கொலை, கொள்ளை கலாசாரம் "இளைஞர்களுக்கு நாளை" என கூறிக்கொண்டு நாளைய இளைஞர்களை இன்றே வெள்ளை வேனில் கடத்தும் சிந்தனை போலாகும். இவ்வாறு ஆட்சியாளரை

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



முதன்மையாகக் கொண்டே வரலாறு படைக்கப்படுகின்றது. எமது நாட்டின் வரலாற்றை எடுத்து நோக்கினால் நிலப் பிரபுக்கள் ஆட்சி முடிவடையும் முன்பே மன்னர்கள் ஆட்சி தோன்றி அவர்களின் சுயலாபத்திற்காக ஒரே குடும்பத்தை சேர்ந்த மன்னர்கள் தனக்கு தேவையானபடி எமது நாட்டை மூன்று, நான்கு இராச்சியங்களாக பிரித்து ஆட்சி செய்தனர். இதன் அடிப்படையில் கோட்டை இராச்சியம், யாழ்ப்பாண இராச்சியம், கண்டி இராச்சியம் என நாட்டின் தலைநகரம் பிரிக்கப்பட்டது.

இவர்களுக்கிடையில் தோன்றிய நில ஆதிக்க கொள்கையும் தனது சுரண்டல்வாத தன்மையும் அதிகரித்து இவர்களுக்கிடையே போர் ஏற்பட்டது. இதில் வெற்றி பெறவும், ஒரு தலைநகரை தனது தலைநகராக கைபற்றி கொள்ள வெளிநாட்டு ஆயுத படைகளை ஒவ்வொரு மன்னர்களும் அழைத்து வந்தனர். இவ்வாறு எமது நாட்டுக்கு படையெடுத்த அந்நிய ஆட்சியாளர்கள் இன்றும் கூட எம்மை முகமூடி அணிந்து ஆளுகின்றனர். இவ்வாறு வருகை தந்த அந்நியர்களில் ஆங்கிலேயரின் வருகையில் பின் எமது நாட்டில் பல மாற்றங்கள் தோற்றம் பெற்றன இவைகளில் பெருந்தோட்ட பயிர் உற்பத்தியும் அதில் தொழில்புரிய தென் இந்தியாவில் இருந்து தொழிலாளர்களைக் கூலி படையாக எமது நாட்டுக்கு இறக்குமதி செய்தனர் இன்று மலையக தமிழரை அன்றைய ஆட்சியாளர்கள் இலங்கையின் மன்னார் துறைமுகத்தில் இறக்கிவிட்டு அவர்களை கால்நடையாக மலையக பகுதிக்கு அழைத்து வந்தனர்.

இவ்வாறு அழைத்து வரும் போது சிலர் உணவு இன்றியும் விஷம் கூடிய அரவங்கள் தீண்டியும், பொதி சுமக்க முடியாது மூச்சி திணறியும் பல்லாயிரக்கணக்கான மக்கள் இறந்தும் சிலர் நோய்வாய்ப்பட்டும், எஞ்சிய மக்களை அன்றைய வெள்ளையர் தனது போக்குவரத்திற்காக பயன்படுத்திய குதிரைகளை வைத்து பராமரித்த இடங்களில் (லயன்) அவர்களை தற்காலிகமாக தங்க வைத்தனர். இந்த லயன் அறைகள் தோட்ட பகுதிகளில் இன்னும் காணப்படுகிறது. இவைகள் சுமார் 200 வருடங்களுக்கு மேற்பட்டவையாகும். மனிதனின் அடிப்படை தேவையான உணவு, உடை, இருப்பிடம் என்பன எதுவும் இல்லாது உயிர்வாழ்ந்த மக்கள் பிரிவினரே இன்றைய மலையக மக்கள் என்று கூறப்படும் தோட்ட தொழிலாள வர்க்கமாகும். இவர்களை எமது மக்கள் என உரிமை கூறும் அரசியல் வாதிகள் இட்ட பெயர்தான் "இந்திய வம்சாவளி". இதன் மூலம் நாடற்றவன் அல்லது உரிமையற்றவன் என கூறாமல் கூறுகின்றனர்.

ஆங்கிலேயரின் தேவைக்காக அழைத்து வந்த மக்களை பிரித்தும், ஒடுக்கியும், அடக்கியும் தான் ஆட்சிசெய்தனர். வெள்ளையர்களின் பிரித்தாளும் கொள்கையை அப்படியே முன்னோக்கி செயல்படத்தினர். மக்களை இனரீதியாகவும், சாதிரீதியாகவும் பிரித்து குடியமர்த்தினர். அதாவது அவர்களை பல்லன், பறையன், குடியானவன், சக்கிலியன் என தொழில் அடிப்படையில் திட்டமிட்டு பிரித்தனர் இச்சாதி பிரிவினைக்கு இந்தியாவும் நேரடியாக உதவியது. அதன் அடிப்படையில் உடல் ஆரோக்கியமாகவும், வெள்ளை நிறத் தோல் உள்ள மக்களை வெள்ளையன் எனவும் இவர்களை வெள்ளையரின் கோட்டை (வீடு) சேவகர்களாக வகைப்படுத்தினர்.

இச்சாதியல் வணங்கும் கடவுளைக் கூட பிரித்தே வணங்கினர். இதனை இன்று கூட நாம் ஆலயங்களிலும் , கிராமப்புறங்களிலும் கூடிய அளவு காணக் கூடியதாகவுள்ளது. ஆலய வழிபாட்டில் உயர் சாதி மக்கள் மாத்திரமே இறைவனின் கருமபீட வழிபாட்டை செய்ய முடியும் அல்லது கோவிலின் உள்ளே செல்ல முடியும் என கூறப்படுகிறது.

இவ்வாறு தொடர்ந்தும் 150 வருட காலமாக இம் மக்கள் பொருளாதாரப் பிரச்சினைகள் காரணமாகவும், இவ்வாறான சாதி வேற்றுமை காரணமாகவும் எத்தனையோ கஷ்டங்கள், துயரங்களுக்கு மத்தியில் வாழ்ந்து வருகின்றனர். மொழி, சாதி, கலாச்சாரம், பண்பாடு, இனம், தொழில், என இன்னோரன்ன பிரிவினைகள் அனைத்தையும் அதிகாரம் உள்ள ஆட்சியாளரே திட்டமிட்டு நடாத்தி வருகின்றனர் என்பது உண்மை. எனவே இவ் ஆட்சிமுறை நிலவும் வரை மக்கள் முகம் கொடுக்கும் கஷ்டங்களும் கூடவே இருக்கும் என்பது தவிர்க்க முடியாது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கையின் சுபாவம்



இயற்கைக்கும் எமது வாழ்க்கைக்கு இடையில் உள்ள தொடர்பு மிகப் புதினமானதொன்றாகும். வாழ்கையின் சுபாவமும் இயற்கையின் சுபாவமும் இரண்டல்ல ஒன்றே தான் என எனக்கு பல சந்தர்பங்களில் தோன்றியுள்ளது. சில காலகட்டத்தில் வெள்ளப் பெருக்கு, வரட்சி போன்ற அனர்த்தங்களினால் பாதிப்பு ஏற்படுகின்றது. ஆனால் வசந்த காலத்தில் மரம், செடி, கொடிகள் காய் கனிகலால் நிரம்பி புண் சிரிப்புடன் அவை ஆடி அசைகின்றது. எமக்கும் அப்படித் தானே பல்வேறு கஷ்டங்களுக்கும் துயரங்களுக்கும் முகம் கொடுக்கின்றோம் அச் சந்தர்பங்களில் வாழ்க்கையே வெறுத்துப் போகும். ஆனால் எதிர்பார்புகள் வெற்றியடையும் போது கனவுகள் நனவாகும் போது வாழ்க்கை எவ்வளவு அர்த்மானதாகவும், வாழ்க்கையை விட அர்த்மான வேறொன்றும் இருக்க முடியுமா? என நினைக்க தோன்றுகின்றது. சவால்களை வெற்றி கொள்ளும் அளவுக்கே வாழ்க்கையை அனுபவிக்க முடியும். பிறந்து, வளர்ந்து சொகுசாக வாழ்ந்து ஜாலியான ஓர் வாழ்க்கையின் முடிவு வெரும் வீணான வாழ்க்கைகளே என எனக்கு தோண்றுகிறது. ஆனால் இன்னொருவரை வாழவைப்பதற்காக ஒருவர் ஒரு நாளாவது பாடுபட்டிருந்தால் அதுவே எமது வாழ்க்கைக்கு புத்துணர்வளிக்கின்றதல்லவா? நாம் எவருக்குமே தனித்தனியாக வாழ முடியாது. நாம் தனித்தனியாக உள்ள வரையில் எமக்கு தீங்கு விலைவிப்போரே வெற்றியடைவார்கள். எனவே சிறந்ததோர் உலகை நிர்மாணிப்பதற்கு ஏனையோரைப்பற்றி சிந்திப்பது அத்தியாவசியமாகும். ஒன்றுக்கொன்று போட்டி போட்டு தாண்டி செல்லும் மலைகளைப் போலன்றி அனைவருக்கும் குளுமையூ ட்டும் நீரோடையாக மாற முடியுமென்றால் உலகம் இதைவிட சிறந்ததாகும் அல்லவா?

ராஜா வீட்டு காற்றாக மாறுவதற்கு பதிலாக உழைப்பாளியின் கலைப்பை போக்கும் இதமான காற்றாக முடியுமென்றால், பூ ங்காவில் மலராகுவதற்கு பதிலாக முற்செடிகள் நிரம்பிய வெளியில் மலராய் உதிக்க முடியுமென்றால் அன்றைய தினம் இவ்வுலகம் எவ்வளவு இதமானதாகவிருக்கும்.

## பிரிந்த உறவுகள்

இணைய வேண்டிய கரங்களை
பிரித்து வைத்தது யாரடா.....?
அழிய வேண்டிய பலங்கள் யாவும்
இணைந்து இருப்பதை பாரடா....


உயர்வு தாழ்வு என்ற பேதம்
இன்றி பிரிவுகள் இல்லையே
உலகில் பிரிவினை அனைத்துக்கும் அதுவே
காரணி ஆகுதே

தாழ்ந்தவர்களை சுரண்ட விரும்பும்
உயர்ந்தவர்களின் கொள்கையை
ஒன்று சேர்ந்தே ஒழிக்க வேண்டும்
தெற்கிலும் போல் வடக்கிலும்

கண்ணீரும் வியர்வையும் ஒரே மணமே
பாடுபடுகிற வர்கத்தில்
இரத்தத்தில் இன உணர்வு ஏற்றிய
நெருப்பினில் நாம் வேகுகிறோம்

சுரண்டப் படுகிற வர்கம் நாம்
ஒன்று சேர்ந்தே ஆகணும்
வாருங்கள்: கை கோருங்கள்
தோழரே, இனியுமேன் பேதம்?


---சரோஜா போல்ராஜ்---




உங்கள் பெருமதிமிக்க படைப்புகளை, கருத்துக்களை இப்பக்கத்தில் பிரசுரிக்க தயாராகவுள்ளோம் என்பதை அன்புடன் தெரிவித்துக்கொள்கிறோம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# குழந்தைகளைப் பற்றி கூறுங்கள்

ஒரு குழந்தையை தனது மார்பில் அரவணைத்துக் கொண்டிருக்கும் பெண்ணொருத்தி "எமக்கு குழந்தைகளைப் பற்றி கூறுங்கள்" என்று சொன்னால்.

உங்கள் குழந்தைகள் உங்களுடையதல்ல, அவர்கள்
வாழ்க்கையின் அபிலாஷைகளுக்கு உறியவர்களே, அவர்கள்
உங்களுடாக வருவர்களே அன்றி உங்களால் வருபவர்கல்ல
அவர்கள் உங்களுடன் இருந்தாலும் உங்களுக்கு
உரிமையானவர்கள் அல்ல.
நீங்கள் அவர்கள்மீது அன்பு செலுத்துங்கள், உங்கள்
சிந்தனைகளை அவர்களுக்கு கொடுக்க வேண்டாம்.
ஏனென்றால அவர்களுக்கு அவர்களுக்கே உரிய சிந்தனைகள்
இருக்கின்ற படியால்
அவர்களது ஓர் வாழ்விடத்தை பெற்று கொடுங்கள் ஆனால் அதில்
அவர்களது வாழ்க்கை பயணத்தை தடுத்து வைக்காதீர்கள்
ஏனென்றால் அவர்களது வாழ்க்கை பயணம் உங்களுக்கு நெருங்க
முடியாத எதிர்காலம் என்ற வசிப்பிடத்தில் உள்ள படியால்,
அதை உங்களால் கனவில் கூட நெருங்க முடியாத படியால்
அவர்களைப் போன்று மாற்றமடைய முயற்சியெடுங்கள்,
அவர்களை உங்களைப் போன்று மாற்றுவதற்கு முயற்சியெடுக்க
வேண்டாம்.
வாழ்க்கை பின்னோக்கி செல்ல முடியாது. இறந்த காலத்துடன்
தங்கிவிட முடியாது.
உங்கள் குழந்தைகள் உயிருள்ள ஈட்டியைப் போன்றது.
அவற்றை முன்னோக்கி செலுத்தும் வில்லுகளே நீங்கள்.
அம்பெய்பவன் அண்டத்தின் இடைவெளியில் தனது இலக்கை
பிடிக்கின்றான். அவன் பிரமாண்டமான சக்தியுடன் இந்த ஈட்டிகளை
வேகமாக முன்னோக்கி செலுத்துவதற்காக உங்களை வளைப்பான்.
அவனின் கரங்களுடாக மகிழ்ச்சியுடன் வளைந்து செல்லுங்கள்,
ஆங்காங்கே செல்லும் ஈட்டிகளுக்கும் அன்பு செலுத்துவதோடு
நிலையான வில்லுக்கும் அவன் அன்பு செலுத்துகின்ற படியால்.

------ கலீல் ஜிப்ரான் --------

# துரோகி


பிறந்த மண்ணில் நீ அகதி
நாட்டில் நீ எதிரி
யாருக்கு நீ எதிரி.....
யாரால் நீ அகதி.....

வறிய மக்கள் பாட்டை கண்டு
பாவம் என்றே கூறுவேன்
அவர்கள் விதியே எனது வெற்றி
என்று புகழும் பாடுவேன்


தாழ்ந்த மக்கள் உடலில் ஏறி
நானும் மேடையில் அமரனும்
அதற்கு பிறகும் உங்கள் கதையை
ஏலம் போட்டே விற்கனும்

தக்க சமயம் வந்த போது
அரச பக்கம் நாடுவேன்.
அந்த நேரம் நீங்கள் எல்லாம்
துரோகி என்றே காட்டுவேன்.

அப்போ..... நான் தானே உன எதிரி
என்னால் தானே நீ அகதி
ஆனால் உலகமெங்கும்
நானே தேசபக்தன் நீயே தேசத் துரோகி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# Sally Zaharan

பல்வேறு இன்னல்களுக்கு முகம் கொடுத்து, அவற்றை தாங்கிக்கொண்டிருக்கும் சம்பிரதாயத்து எள்ளைக்குல் சிக்குண்டிருந்த வரலாற்றை மாற்றியமைத்து, எகிப்து மக்கள் போராட்ட நடவடிக்கைக்குல் என்றும் நிலைக்கும் நினைவுகளை விட்டுவிட்டு எதிர்காலத்திற்கான முன்னுதாரணங்களை ஒன்று சேர்த்த "செலீ சகாரான் தனது உயிரை தியாகம் செய்தார்.
"கயிரோ" வில் பிறந்து வளர்ந்த அவர் "சொஹாக்" வரை பயணித்தது கலைப்பிரிவு பட்டப்படிப்புக்கு ஆகும். தனது படிப்பை வெற்றிகரமாக முடித்து மீண்டும் கயிரோவை நோக்கி அவள் மீண்டும் திரும்பியது ஓர் மொழிபெயர்ப்பாளராக கடமையாற்றும் நோக்கத்தில் ஆகும்.
அரச துரையின் அசமந்த போக்கு, மோசடிகள், சம்பள துண்டிப்புகளுக்கு எதிராக மற்றும் ஹொஸ்னி முபாரக்கின் சர்வாதிகார ஆட்சியை முடிவுக்குக் கொண்டு வருவதற்குமான பாதையை அவள் தேர்ந்தெடுத்தாள்.

"சாலி சகாரான்" இவள் மிகவும் இனியவள், அமைதியானவள், அதேபோன்று வாழ்க்கையை இனியில்லாது நேசித்தவள். தாம் பிறந்த மண்ணில் அனைவருக்கும் சிறந்ததோர் எதிர்காலத்தை உறுதிபடுத்துவதே இவளது ஒரேயொரு குறிக்கோளாகவிருந்தது.

-Sobhy (Friend of her)-

இவளது வயதில் காணப்பட்ட பல்வேறு இளைஞர், யுவதிகள் தனது தனிப்பட்ட வாழ்க்கையைப் பற்றி சிந்திக்கும் சூழலில் "சாலி சகாரான்" போன்றோரின் இவ்வாறான அளப்பறிய முன்னுதாரணங்கள் எமக்கு இன்றியமையாததாகும். 23வயது [illegible] ஓர் படித்த பெண். அன்புமிக்க தாயாகவும், மனைவியாகவும் தன்னைப்பற்றி அல்லது தனது குடும்பத்தைப்பற்றி மட்டும் சிந்திக்காமல் அனைவருக்காகவும் சிறந்ததோர் உலகை நிர்மாணிப்பதற்காகவே அவள் போராடினால். ஆனால் எகிப்து அரசின் கொடூரமான தாக்குதல்கள் அவளது உயிரை பலியெடுத்தாலும் அவளது உயிர் தியாகம், கொந்தளித்துக் கொண்டிருக்கும் இளம் நெஞ்சங்களை எப்பொழுதும் விழிப்புடன் வைத்திருக்கும்.
நாசா நிறுவனத்தின் ஆர்பாட்டத்திற்கு ஆதரவு வழங்கியோரின் ஓர் கோரிக்கையானது "சாலி சகாரானுக்கு" செலுத்தும் நன்றிக் கடனாக விண்வெளிக்கு அனுப்பும் அடுத்த விண்வெளி விமானத்திற்கு "Zaharan" என பெயரிட வேண்டும் என்பதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# MAY DAY 2012







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org